1971 டிசம்பர் 9]

திருநெல்வேலி மாவட்ட வளர்ச்சி மன்ற அரங்கம்

* 199 வின—திரு. எம். முத்தையா : மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்ட வளர்ச்சி மன்ற அரங்கம் ஒன்று புதிதாகக் கட்ட வேண்டுமென்ற செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதுபற்றிய விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) & (இ) முன்னுள் மாவட்டக் கழகக் கட்டிடத்திலுள்ள கூட்ட அரங்கில் இட வசதி போதாமையால் மாவட்ட வளர்ச்சி மன்ற கூட்டங்கள் நடத்துவதற்குத் தனியாக ஒரு கூட்ட அரங்கு கட்ட வேண்டுமென்று திருநெல்வேலி மாவட்ட வளர்ச்சி மன்றம் ஒரு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. இதுபற்றி ஆய்ந்து தக்க செயற்குறிப்பு அனுப்பும்படி திருநெல்வேலி மாவட்ட ஆட்சியரைக் கேட்கப் பட்டுள்ளது.

திரு. எம். முத்தையா : அமைச்சர் அவர்கள் கட்டி முடிப்பதாகக் கூறினர்கள். எப்போது கட்டி முடிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாவட்ட ஆட்சி மன்றத் தலைவரைக் கேட்டிருக்கிறோம். பதில் வந்த பிறகு அரசு பரிசீலித்து முடிவு எடுக்கப்படும்.

Collection of Agricultural loans in Coimbatore District

* 200 Q.—Dr. H. V. HANDE : Will the Hon. Minister for Food and Revenue be pleased to state—

(a) whether a demand made during the end of June, 1970 has been received by this Government from the Coimbatore District Agriculturists Association for the postponement of the recovery of all agricultural loans by one year; and

(b) if so, the details thereof and the action taken thereon?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) கோயம்புத்தூர் மாவட்ட விவசாயிகள் சங்கத்திடமிருந்து முறையீடு எதுவும் அரசுக்கு வரவில்லை. எனினும், சங்கம், 23—2—1970 அன்று கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் மனு ஒன்றைக் கொடுத்தது.

(இ) வான் பொய்த்தமையால் கடும் வறட்சி நிலவுகின்ற பகுதிகளில், அரசுக் கடன்கள் வசூலை 26—3—1970 நாளிலிருந்து 6 திங்கள் கால அளவுக்கு ஒத்தி வைக்க கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அரசு அதிகாரமளித்தது. மேலும், மிகவும் இன்னலுற்றவர்களுக்கும் இச் சலுகையை அளிக்குமாறும். கட்டாய முறைகளை மேற்கொள்ள வேண்டாம் என்றும் அரசு கட்டளையிட்டுள்ளது.

Dr. H. V. HANDE : Arising out of the answer of the Hon. Minister about the non-levy for six months from June 1970, may I know from the Hon. Minister what is the exact position during current year, whether it has been postponed or have the Government collected it or shown the same concession as last year?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : கோவை மாவட்டத்தில் மட்டுமல்ல, தமிழ்நாட்டிலுள்ள எல்லாப் பகுதிகளிலும் எங்கெங்கு வரட்சியால் பாதிக்கப்படுகிறது என்று மாவட்ட ஆட்சி மன்றத் தலைவர்கள் கருதுகிறார்களோ அந்த இடத்தில் வரி வசூல் ஒத்தி வைப்பதற்கு அல்லது வரி வஜா செய்யும் உரிமை மாவட்ட ஆட்சி மன்றத் தலைவர்களுக்கு இருக்கிறது. மேற்கொண்டு அவர்களுக்கு இருக்கிற வரம்பிற்கு அதிகமாகப் போகும்போது அரசைக் கேட்பார்கள்.

Dr. H. V. HANDE : I would like to know from the Hon. Minister this. Concession was given during last year from June 1970 to December 1970. Has that amount been collected this year?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இந்த ஆண்டு அங்கு வசூலிக்கிறார்களா, எவ்வளவு வசூலித்திருக்கிறார்கள் என்று கேட்கிறார்கள். தனிக் கேள்வி வேண்டும்.

திரு. கே. என் குமாரசாமி : கோயம்புத்தூரில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கடன்கள் வஜா செய்யப்பட வேண்டும் என்று கோவை அபிவிருத்தி மன்றக் கூட்டத்தின் தீர்மானம் அரசுக்கு வந்ததா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அப்படித் தீர்மானம் வந்ததா இல்லையா என்பதைப் பற்றிய குறிப்பு இல்லை. கடன்கள் வஜா செய்கிற விஷயம்பற்றி ஏற்கனவே குறிப்பிட்டேன். மாவட்ட ஆட்சி மன்றத் தலைவர்களுக்கு வஜா செய்யும் உரிமை தரப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு இருக்கிற வரம்பிற்கு மேல் வஜா செய்ய வேண்டுமென்றால் அரசுக்கு எழுத வேண்டும். பிறகு அரசு பரிசீலித்து முடிவு எடுக்கும். மாவட்ட ஆட்சி மன்றத் தலைவர்கள் தான் எழுத வேண்டும்.

சென்னை நகரில் மத்திய அரசுக்குச் சொந்தமான இடங்கள்

* 201 வினா—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகரத்தில் மத்திய அரசுக்குச் சொந்தமான காலி இடங்கள் எங்கெங்கு உள்ளன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : விவர அறிக்கை@ ஒன்று சட்டப் பேரவையில் வைக்கப்பட்டுள்ளது.

@ 100-101-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.